பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 14 வெள்ளிக்கிழமை 30.08.2024 கதிர் 296



# மீட்சிக்கான துரித திட்டமே எனது தேர்தல் அறிக்கை

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டின் மீட்சிக்காக செயற்படுத்த வேண்டிய துரித வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது. 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' என்ற தேர்தல் அறிக்கையை

☞8

# உள்ளாட்சி தேர்தலுக்கான திகதி விரைவில் அறிவிப்பு

## ஆணைக்குழு அறிக்கை

வெகுவிரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் திகதியை அறிவிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை

☞8

## ஜனாதிபதித் தேர்தலுக்கான

# ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு ஆரம்பம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தேர்தல் கண்காணிப்புக்குழுவில் உள்ளடங்குகின்ற நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் 26 பேர் கண்காணிப்புப் பணிகளுக்காக நேற்றைய தினம் நாட்டின் 9 மாகாணங்களுக்கும் சென்றுள்ளனர். இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புப் பணி தொடங்கியுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல்

☞2

# இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து பாலித ரங்கே பண்டாரவை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நீக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு --முன்னர் அவர் தானாகவே பதவியில் இருந்து விலகிவிட்டார் என்று சிங்களப் பத்திரிகையொன்று நேற்-று தகவல் வெளியிட்டிருந்தது. ஆனால் அந்தச் செய்தியை அவர் மறுத்திருந்தார்.

பொதுச்செயலாளர் பதவி தொடர்பான பணிகளை அவர் சரியாக செய்யவில்லை என்பதுதான் அவரை அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையால் வெற்றிடமாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவிக்கு செல்வி தலதா அத்துகோரளவை நியமிக்குமாறு கட்சியின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிய பின்னர், திருமதி தலதா அத்துகோரள இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெறவில்லை.

☞2

# மறியல் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல உட்பட நால்வரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுளின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த பெப்ரவரி 2 கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## அனைவரும் ஒருமித்து நின்று

# தேர்தலில் தமிழர் வாக்குகளை உபயோகமாகப் பயன்படுத்துக

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அறிவுரை

அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் என்று தமிழ்க் கட்சிகள் சிலவற்றிடம் அறிவுறுத்தியிருக்கிறார் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல்.

நேற்று கொழும்புக்கு வந்திருந்த அவருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் சிலவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது. தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம், தேர்தல் புறக்கணிப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறிதரன், ரெலோவின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற

☞2

# 3 பொலிஸார் கைது

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த 3 பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று வெலிபன்ன பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்துகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 3 பொலிஸாரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்குரிய 3 பொலிஸாரும் போதைப்பொருள் விற்பனை செய்யும் வீடொன்றில் தங்கியிருந்தனர் என்று வெலிப்பன்ன பொலிஸ் நிலைய உயர் அதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து, இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைதான பொலிஸாரும் போதைப்பொருள் பயன்படுத்தும் பொருட்டு அங்கு தங்கினார்களா என்பது குறித்து விசாரணை நடத்திவருவதாக வெலிபன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மருத்துவ அறிக்கையின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நடந்ததை அறிவதற்கு சகல முயற்சிகளும் வேண்டும்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிக்கை

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய சகல முற்சிகளும் மேற்கொள்ளப் படவேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

''இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்னநேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்'' என்று அது தனது அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறது.

வலிந்துகாணா

☞2



# சட்டத்தரணிகள் நேற்று மன்னாரில் புறக்கணிப்பு

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது

☞8

# நாமல் ஆட்சிக்கு வருவது இனி கனவிலும் நடக்காது

## நிமல் லன்ஸா எம்.பி. தெரிவிப்பு

முப்பது வருடங்களாக மக்களுடன் உழைத்து கட்டியெழுப்பிய அரசியல் அந்தஸ்தை ராஜபக்சக்கள் அழித்துவிட்டனர். நாமல் ராஜபக்ச ஆட்சிக்கு வருவது கனவில் கூட நடக்காது என்று பொதுஜன பெரமுனவில் இருந்து ரணில் பக்கம் தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தெரிவித்தார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

☞8

# தமிழ் மக்களுக்குத் தீர்வாகவே சுயாட்சியை முன்வைத்தோம்

## மக்கள் போராட்ட முன்னணி யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்வற்ற முறையில் நீடித்துச் செல்ல முடியாது. எனவேதான் நாம் சுயாட்சி என்ற தீர்வுத் திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம். அதற்கு முன்னுரிமை வழங்குவதாகக் குறிப்பிட்டிருக்கின்றோம் என்று மக்கள் போராட்ட

☞2

## இனி இது .....

இதேவேளை,பொதுச்செயலாளர்பதவியில் இருந்து தாம் நீக்கப்பட்டமை தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் பாலித ரங்க பண்டார குறிப்பிடுகின்றார்.

இந்தவதந்திபற்றிஎனக்குத்தெரியாது. இந்த செய்தியை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. அப்படியொரு செய்தி எனக்கு தெரியாது,' என அவர் மறுத்துள்ளார்.

................

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக கருத்துக் கணிப்புக்கள் வந்து-கொண்டே இருக்கின்றன.

சுகாதார கொள்கை நிறுவகம் நடத்திய கருத்துக்கணிப்புஎன்றொ-ருஅறிக்கைநேற்று வந்துள்ளது. இதன்படி ரணில் விக்கிரமசிங்க போட்டிக் களத்தில் மிக வேகமாக முன்னேறி வருகின்றார். அவருக்கு ஆதரவுத் தளம் பெருகியிருக்கிறது.

கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் அநுர திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் பிரபல்யம் சற்று குறைந்துள்ள போதிலும், அவர்கள் இருவரும் இன்னும் முன்னணியில், அருகருகே நிற்பதாக கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தனது ஆதரவு சதவீதத்தை 23% ஆக அதிகரித்துள்ளார். அனுர திஸாநாயக்க 37% வாக்குகளுடன் முன்னிலையில் உள்ளார், அதேவேளை சஜித் பிரேமதாச 36% உடன் அவருக்கு அருகில் உள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் நாமல்ராஜபக்ஷ4%வாக்குகளுடன்நான்காவது இடத்தில் உள்ளார்.

ரணில் தொடக்கத்தில் 8 சதவீத ஆதரவுத் தளத்தையே வைத்திருந்தார். ஆனால் இப்போது அவரது ஆதரவுத் தளம் அதிகரித்து வருகின்றது என இந்த ஆய்வு காட்டுகின்றது.

இதுவொன்று இறுதியும் அறுதியும் நடுநிலையானதுமான ஆய்வு என்று சொல்லிவிடுவதற்கில்லை. அதனால் நாளை வரும் மற்றொரு ஆய்வு இந்த முடிவுகளுக்கு மாறானதாக ஒரு முடிவை அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. செப். 22 அன்றுதான் உண்மையான முடிவு தெரியவரும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தேர்தலில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன, புளொட் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் பங்கேற்றிருந்தனர்.

வெளிநாட்டுப் பயணமொன்றுக்குச் செல்லவேண்டியிருந்ததன் காரணமாக, சந்திப்பின் தொடக்கத்திலேயே சிறிதரன் வெளியேறினார்.

அதற்கமைய இச்சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் நிலவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கடந்த 75 வருடகால அனுபவத்தில் தமிழ் மக்களால் ஒற்றையாட்சியின் கீழ் வாழமுடியாது என்பதைத்தாம் புரிந்துகொண்டிருப்பதாகவும், அதேபோன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாகத் தோல்வியடைந்திருப்பதன் காரணமாக அதனூடாக தமிழ் மக்களால் முன்நோக்கிச் செல்லமுடியாது எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அஜித் டோவலிடம் எடுத்துரைத்தார்.

ஆகவே 13 ஆவது திருத்தத்தையும், 2015 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி முறைமையை உள்ளடக்கித்தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைபையும் தாம் நிராகரிப்பதாகத் தெரிவித்த கஜேந்திரன், வட, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டி முறைமையை வென்றெடுப்பதற்கு இந்தியா உதவவேண்டும்எனவும்கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைதமிழ்மக்கள்புறக்கணிக்கவேண்டும் என்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை குறித்தும், தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான தமிழ் பொதுக்கட்டமைப்பின் தீர்மானம் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இத்தகைய மாறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் வாக்குவீதம் குறித்தும் கேட்டறிந்த அஜித் டோவல், இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்துநின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது என ஆலோசனை வழங்கினார்.

அத்தோடு தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் எத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும் என்று தான் கூறப்போவதில்லை எனக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் இத்தகைய தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் ஜனநாயகத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது குறித்து சிந்தித்து செயலாற்றவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. உள்ளிட்ட ஆளும் தரப்பு ஆதரவுக் கட்சிகளும் நேற்றுச் சந்தித்து உரையாடினர். இ.தொ.கா. பொதுச் செயலாளர், அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், தொழில் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் போது இலங்கை மற்றும் இந்தியாவிற்குமிடையிலான உறவை வழுப்படுத்துதல் மற்றும் சமூக பொருளாதார விடயங்கள் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவிற்கான முன்னாள் தூதுவர் மிலிந்த மொறகொடவையும் டோவல் சந்தித்துப் பேசினார். பிரதமர் தினேஷ் குணவர்தனவையும்அவர்நேற்றுச்சந்தித்தார்.

இதன்போது, இலங்கை - இந்திய இருதரப்புஉறவைபலப்படுத்தவேண்டும்என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலாக்கப்படல்களால்பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாக ஒகஸ்ட் 30 பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனைமுன்னிட்டுசெஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவினால்வெளியிடப்பட்டுள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உலகளாவியரீதியில்போர், வன்முறைகள், பேரிடர்கள், மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களைபிரிந்தசகலரையும்நாம் இன்றைய தினத்தில் நினைவுகூருகின்றோம்.

2023ஆம் ஆண்டின் இறுதியில் உலக ளாவிய ரீதியில் 239,700 க்கும் மேற்பட் டோர்காணாமல்போயிருக்கின்றனர்என்றுசெஞ் சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கக் கூட்டிணைவில் பதிவுசெய்யப்பட்டிருக் கின்றார்கள். இருப்பினும் இந்த எண்ணிக்கை காணாமலாக்கப்படல்களின் உண்மை நிலைவரத்தையும், தீவிரத்தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை.

ஒவ்வொரு வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவத்தின் பின்னாலும் தமது அன்புக்கு ரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என அறிந்துகொள்ளமுடியாததனால்உறவுகளுக்கு ஏற்படும்அளவற்றதுயரம்மறைந்திருக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், இத்தகையதோர்பிரச்சினைஉண்டுஎன்பதை ஏற்றுக்கொள்வதும், அதற்குரிய தீர்வை வழங்குவதும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகும்.

மாறாக இப்போதும் தமது அன்புக் குரியவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களினதும் துன்பியல் அனுபவங்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்க மறுப்பதானது அவர்கள் மத்தியில் அதீத கோபம் தூண்டப்படுவதற்கும், நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவு ஏற்படுவதற்குமே வழிகோலும். எனவே இப்பிரச்சினை தீர்க்கப்படாவிடின், தனி நபர்களால் மாத்திரமன்றி ஒட்டுமொத்த சமூகத் தினாலும் முன்நோக்கிப் பயணிக்கமுடியாது.

இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும் பங்கள் காணாமல்போன தமது அன்புக் குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள்கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும்உண்மையைக்கண்டறிவதற்குரியசகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றுள்ளது.

## ஐரோப்பிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செப்டெம்பர் 21 இடம்பெறவுள்ளது. வழமைபோன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அழைப்பொன்றை விடுத்திருந்தது. அவ்வழைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து இம்மாதத் தொடக்கத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் இது குறித்த நிர்வாகமட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அதற்கமைய பிரதி தலைமைக் கண்காணிப்பாளர் ஒருவரையும், தேர்தல் கண்காணிப்பு நிபுணர்கள் 9 பேரையும் கொண்ட குழுவொன்று கடந்த 13 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது. அதேவேளை நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்த 26 நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் நேற்று வியாழக்கிழமை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நச்சோ சன்செஸ் ஆமரால் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இருந்து நாட்டின் 9 மாகாணங்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பிரித்து அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமதுகண்காணிப்புக்குழுவில்நீண்டகாலக் கண்காணிப்பாளர்களின் வகிபாகம் மிகமுக்கியமானதுஎனச்சுட்டிக்காட்டியிருக்கும் தலைமைக்கண்காணிப்பாளர்நச்சோசன்செஸ் ஆமர், ''அவர்களது அவதானிப்புக்களும், அதனடிப்படையிலான தகவல்களும் தேர்தல் செயன்முறை தொடர்பில் பக்கச்சார்பற்ற, தரவுகளை மையப்படுத்திய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு எமக்குப் பெரிதும் உதவும்'' என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதன்படி மேற்குறிப்பிட்டவாறு 9 மாகா ணங்களுக்கும்அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் பெருநகரங்கள் மாத்திரமன்றி சிறிய கிராமங்கள்தோறும் சென்று வாக்காளர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுப்பர். அதேபோன்று பிராந்திய மட்டத்தில் தேர்தல் சார்ந்து இடம்பெறும் முகாமைத்துவம், தேர்தல் தினமுன்தயாரிப்புக்கள், பிரசாரநடவடிக்கைகள், தேர்தலுடன்தொடர்புபட்டதாகசிவில்சமூகங்கள் மற்றும் ஊடகங்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் நீண்டகாலக் கண்காணிப்பாளர்களால் விசேடமாகக் கண்காணிக்கப்படும். அதன்பிரகாரம் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் கொழும்பைத் தளமாகக்கொண்டு மதிப்பீட்டுப்பணியில் ஈடுபடும் குழுவினருக்கு உதவியாக அமையும்.

அதேவேளை மேலும் 32 பேர் அடங்கிய குறுங்காலக் கண்காணிப்பாளர் குழுவினர் தேர்தல்வாரத்தில்நாட்டைவந்தடையவுள்ளனர் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோபகே யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எந்த ஒரு வேட்பாளரும் சரியான கொள்கையுடனும் கோட்பாட்டுடனும் இந்த அரசியல் களத்தில் இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். இந்த வறுமையை நாங்கள் நிரப்ப வேண்டிய தேவையை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எனவே தான் எங்களுடைய 'மக்களின் கொள்கை' என்ற இந்த கொள்கை பிரகடனத்தின் ஊடாக வர்க்க பிரச்சினைகளில் இருந்து இனப் பிரச்சினை வரைக்கும் சரியான தீர்வை முன்வைத்துள்ளோம்.

வடக்கு கிழக்கு மக்கள் மிக நீண்ட காலமாக நாங்கள் ஒரு பெரும் சிக்கலுக்குள் இருக்கின்றோம். இனப்பிரச்சினை எங்களைக் கொன்று குவித்து இருக்கின்றது. மக்கள் இனப்பிரச்சினையினால் இழந்தவை கொஞ்ச நஞ்சம் அல்ல. இந்தப் பிரச்சினை தீர்வற்ற முறையில் நீடித்துச் செல்ல முடியாது. எனவேதான் நாம் சுயாட்சி என்ற தீர்வுத் திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம். அதற்கு முன்னுரிமை வழங்குவதாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

புரையோடிப் போய் இருக்கும் மேலாதிக்க சிந்தனைகொண்ட முதலாளித்துவ அரசியல்வாதிகள்மத்தியில்நாங்கள்தீர்க்கமான பல கொள்கைகளோடு மக்களுக்கு என்ன தேவை என்பதை ஆராய்ந்து, சரியான பாதை எது என்பதை மிக ஆழமாகச் சிந்தித்து எங்களுடைய கொள்கையை நாங்கள் வெளியிட்டு இருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் இருந்தாலும் இங்கு இரண்டே இரண்டு கொள்கைகள் மட்டும்தான் இருக்கின்றன என்பதை நாங்கள் இந்த தேர்தல் பிரச்சாரங்களில் அடிப்படை அம்சமாகக் குறிப்பிடுகின்றோம்.

எங்களுடைய கொள்கை மிகவும் தனித்துவமானது; மக்களுக்கானது. எமது கொள்கை பிரகடனத்தில்கூட மக்களின் கொள்கை, மக்களின் வேட்பாளர் என்றுதான் பாவிக்கின்றோம். நாங்கள் அரசியல் செய்யவில்லை. எனவே எமது கொள்கைகள் மக்களிடம்செல்லவேண்டும். தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்கு அதில் பதிலிருக்கிறது.

வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்கள் மிக மோசமான அடக்குமுறையை எதிர்கொள்கிறார்கள். இங்கு சட்டவிரோதமாக விகாரைகள் கட்டப்படுகின்றன. ஆயிரக்கணக்கான படைனர் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பயங்கரவாத தடை சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய போராட்டம் தொடர்கின்றது. ஆனால் இவற்றுக்கெல்லாம் தீர்க்கமான ஒரு

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# பொதுவேட்பாளருக்கு தமிழ்மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்

## யாழ் வணிகர் கழகம் கோரிக்கை

தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி, மற்றும் சுயநிரணய கோரிக்கையை நிலைநிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொதுவேட்பாளரான பா.அரியநேந்திரனை ஆதரித்துஎமதுவரலாற்றுக்கடமையைநிறைவேற்றி உலகமெல்லாம் ஒலிக்க சங்கு சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என யாழ்ப்பாண வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண வணிகர் கழகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை அரசு இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக சித்திரித்து அதற்கான முழு வேலைத்திட்டத்தையும் சுதந்திரத்திற்கு பின் 1948 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்திக் கொண்டு வருகிறது.

தமிழ் மக்கள் தங்கள் தாயகமான வடக்கு, கிழக்கைப்பாதுகாத்து உரிமையோடுவாழ்வதற்காக கடந்த 75 வருட கால நீண்ட எமது போராட்டம் இன்னும் வெற்றிபெறவில்லை.

தமிழ் தலைமைகள் எமது உரிமையை நிலைநாட்டவும்,சமாதானத்தைநிலைநிறுத்துவதற்கும் எடுத்த முயற்சிகள் அத்தனையும் இன்றுவரை சிங்களத்தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு உதாசீனப்பட்டுள்ளன.

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13 ஆம் அரசமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாமை.

பேச்சு என்ற ரீதியில் காலத்தைக் கடத்தி தட்டிக்கழிக்கப்பட்டு தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் வரை ஏமாற்றியுள்ளார்கள்.

நாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். வடக்கு - கிழக்கு தமிழர்களுடைய தாயகம் நாம் தனித்துவமானவர்கள் எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு எமது நிலம், மொழி, கலை, கலாசாரம். பண்பாடு போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

அதற்கு பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்கு தேவை என்பதை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தலை எதிர்கொண்டு அதற்கான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

இதன் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் நாம் இன்னும் எமது உரிமைப் போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அடையாளப்படுத்த முடியும்.

இந்த ஜனாதிபதித்தேர்தலை தமிழ்மக்களின் விடிவுக்காக ஜனநாயக முறையில் புதிய அணுகுமுறையாகஇதைஅணுகிஎமதுஉரிமைகளை வென்றெடுக்க புத்திசாதுரியமாக நடந்து இதனை அணுகுவதே சிறந்த தீர்மானமாக அமையும்.

இந்த முயற்சிக்கு வடக்கு, கிழக்கில் செயற்படும் தமிழ்தேசியம் சார்ந்த அனைத்துக்கட்சிகளும், வடக்கு, கிழக்கில் செயற்படும் அத்தனை பொது அமைப்புக்களும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் அத்தனை தமிழ் பேசும் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு தங்கள் பேராதரவை வழங்கி வாக்குகளை செலுத்த வேண்டும்.

அத்துடன் தென்னிலங்கை கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும், தென்னிலங்கை வேட்பாளர்களுக்கும், தென்னிலங்கை கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் வடக்கு, கிழக்கை சேர்ந்த கட்சிகளும், தென்னிலங்கை தலைவர்களுடன் தனிப்பட்ட நட்பு வைத்துள்ளோர், மாற்றுக்கருத்துள்ளோர் தங்கள் நிலைப்பாட்டை மாற்றி தமிழ் இனத்தின் விடிவிற்காக தமிழ் மக்களின் ஜனநாயக முறைப்படி நடைபெறும் உரிமைக்கான அங்கீகாரத்திற்கு தங்கள் பேரா தரவை வழங்க வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது.

(05)



# வவுனியாவில் தொடர் விபத்துகளை ஏற்படுத்திய சாரதி மடக்கிப்பிடிப்பு

வவுனியா நகரில் ஆபத்தான வகையில் காரைச் செலுத்தி தொடர்ச்சியானவிபத்துக்களைஏற்படுத்தியசாரதி இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப் பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து காரை செலுத்திவந்த இளைஞர் ஒருவர் உக்கிளாங்குளம் பகுதியில் விபத்தை ஏற்படுத்திவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது வைரவபுளியங்குளம் மற்றும் நகரப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த ஏனைய வாகனங்களுடனும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இதனையடுத்து குறித்த காரை இளைஞர்கள் சிலர் விரட்டிச் சென்றுள்ளனர். அதிவேகமாகபயணித்த கார் பூந்தோட்டம், பெரியார்குளம் பகுதியில் வீதியின் கரையில் இருந்த மின்சார கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகிய நிலையில் காரின் சாரதியை மடக்கிப்பிடித்த இளைஞர்கள், அவரை நையப்புடைத்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# படகு விபத்துக்குள்ளாகி மாயமான இந்திய மீனவரின் சடலம் மீட்பு



கடந்த செவ்வாய்க்கிழமை மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய போது சூறைக்காற்றால் நடுக்கடலில் இந்திய படகு மூழ்கி விபத்துக்குள்ளானது.

அப்போது மூழ்கிய படகில் இருந்து இரண்டு மீனவர்கள் நீந்தி இலங்கை கடற்படையினரின் உதவியால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு விமானம் மூலம் தாயகம் திரும்பி உள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இரு மீனவர்கள் காணாமல் போனார்கள். அவர்களை ராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகள் அனுமதியோடு சக மீனவர்கள் இரண்டு நாட்களாக தேடி வந்த நிலையில் புதன்கிழமை மாலை நடுக்கடலில் மாயமானமீனவர்களில் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடலை கைப்பற்றிய மீனவர்கள் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திற்கு உடலை எடுத்து வந்து சேர்த்தனர். இதையடுத்து உடற்கூற்று பரிசோதனைக்காக ராமேஸ்வரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துகுறித்து மரைன்பொலிஸார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், நடுக்கடலில் மாயமான மீனவரை அரசு தேடித் தரும்படி கோரிக்கை விடுத்துள்ள உறவினர்கள் இறந்த மீனவர் எமரிட் குடும்பத்திற்கு அரசு நிவாரண தொகை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(05)





# சட்டவிரோதமான பொருள்களுடன் கட்டுநாயக்கவில் ஐந்து பேர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு கோடியே 58 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் ஐந்து சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், இரண்டு சீனப்பிரஜைகளும், இரண்டு இலங்கையர்களும் , இந்தியப் பிரஜை ஒருவரும் அடங்குகின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து வெளிநாட்டு சிகரெட்டுகள், விஸ்கி போத்தல்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் தலா மூன்று லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.(05)

# பிரதேச வைத்தியசாலைகளின் வளங்களை அதிகரியுங்கள்

## யாழ்.அபிவிருத்தி குழு கூட்டத்தில் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

பிரதேச வைத்தியசாலைகளின் வளங்களை அதிகரியுங்கள் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கிவருகிறார்கள் என யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அனுமதியுடன்புதன்கிழமைஇணைத்தலைவர்களான கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ,வடக்கு மாகாண ஆளுநர் சாள்ர்ஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்வேறு வியங்கள் ஆராயப்பட்ட போதே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குறித்த விடயத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டிருக்கிறது.

சில சமயங்களில் நேயாளர்களை பார்வையிடச் செல்லும் போது பல நேரங்களில் நோயாளர்கள் வெறும்தரையிலேசிகிச்சைபெறுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்த நிலையை மாற்றுவதாயின் பிரதேச வைத்தியசாலைகளின் வளங்களை அதிகரிப்பதன் மூலம் நேயளர்களை அவர்களது இடத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும்.

அதேநேரம் தங்கியிருந்து சிகிச்சைபெற்கொள்ள கூடியதாக இருக்கும் அவசர சிகிச்சைகள், கட்டாய சிகிச்சைகள் போன்றவற்றிற்கு யாழ் போதனா வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நோயாளர்களின் இடநெருக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

எனவே பிரதேச வைத்திய ஆலைகளின் வளங்களை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றார்.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர்எல். இளங்கோவன் ,பிரதேச செயலாளர்கள் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், முப்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### ரணிலைப் போன்ற கொள்கையற்ற சந்தர்ப்பவாதி வேறு யாரும் இல்லை

**அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கை வெளியாகி இருக்கின்றது. அதில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து எதுவும் இல்லை. நாட்டின் துரித மீட்சிக்கான திட்டமே தனது தேர்தல் அறிக்கை என்றும் நீண்டகாலத் திட்டங்கள் குறித்துத் தான் இப்போதைக்கு அக்கறைப்படவில்லை என்றும் அதற்குக் காரணமும் தெரிவித்திருக்கிறார் அவர்.**

**நாடு பொருளாதார நெருக்கடிக்குச் சென்றதற்கு நீண்ட காலமாக இழுபட்ட இனப்பிரச்சினையும் போரும் ஒரு மிக முக்கிய காரணம் என்பதை அவர் அறியாதவரல்லர். இனப்பிரச்சினையைத் தீர்ப்பது நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்று இதற்கு முன்னர் அவர் போட்டியிட்ட அரசுத் தலைவர் தேர்தல்களில் மிகத் தீவிரமாக அவர் பரப்புரை செய்து வந்திருக்கிறார். அந்தத் தீர்வை அடைவதற்காக உள்ளக சுயநிர்ணய உரிமையில் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு இணங்கும் ஒரு அடிப்படை நிலைப்பாட்டைக்கூட அவர் எடுத்திருந்தார்.**

**2015இல் ஆட்சிக்கு வந்தபோது தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து ஐ.நா. மனித உரிமைகள் நிலைமாறுகால நீதிக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தார். ஆனால் பின்னர் அதனை நடைமுறைப்படுத்தாது காலத்தை இழுத்தடித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் உயிருடன் இருக்கும்போதே அரசியல் தீர்வு ஒன்றை அடைவேண்டும் என்று மீண்டும் மீண்டும் கூறிவந்தார். ஆனால் அதைச் செய்யவே இல்லை.**

**அவ்வளவு ஏன்? அரசுத் தலைவராக அவர் பதவியேற்றவுடன்கூட அவர் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத்தான் முக்கியத்துவம் வழங்குவதாக முழங்கினார். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போகின்றேன் என்று முரசறைந்தார். பின்னர் எதிர்ப்புக்களைக் கண்டு அதனைக் கைவிட்டார்.**

**இரண்டே வருடங்களில் அவரது அரசியல் நோக்குநிலை முற்றிலுமாக மாறிவிட்டது. இப்போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அவருக்கு நீண்டகாலத் திட்டமாகிவிட்டது. அதுபற்றிப் பேசக்கூட அவருக்கு விருப்பம் இல்லை.**

**இவற்றுக்கெல்லாம் ஒரே காரணம்தான். அன்று இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுவதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் தனக்கு ஆதரவாகத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தார் ரணில் விக்கிரமசிங்க. இன்று அது பற்றிப் பேசாதிருப்பதன் மூலம் தனக்கு வரக்கூடிய சிங்கள, பௌத்த வாக்குகளை விலக்கி வைத்திடாமலிருக்கு முற்பட்டிருக்கிறார். அவர் ஒரு கொள்கையற்ற சந்தர்ப்பவாதி என்பதை வரலாறு தெளிவாக நிரூபித்துள்ளது.**

**இந்தச் சந்தர்ப்பவாதியை நாளை நாடாளுமன்றம் மூலம் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், சந்திரிக்கா அம்மையாரின் காலத்தில் செய்ததைப் போன்றே மீண்டும் தீர்வுத் திட்டத்தின் பக்கங்களை நாடாளுமன்றத்தில் தனது கட்சியினரை விட்டு எரிக்கமாட்டார் என்பதற்கு எந்த நிச்சயமும் இல்லை. அதிகார வெறி பிடித்திருக்கும் அவர் அதற்காக எந்தக் கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கும் துணிவார்.**

# இரண்டாவது வெறுப்பு?

**என். சத்திய மூர்த்தி**

ஜனாதிபதி தேர்தலில், தமிழர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகளையாவது பெறுவதற்கு, ரணில் மற்றும் சஜித் தரப்புகள் முயற்சிசெய்ய இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது, முதல் விருப்பு வாக்கை, பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு வழங்கும் தமிழ் வாக்காளர்களின் இரண்டாவது விருப்பு வாக்கை பெறுவதற்கே மேற்படி தென்னிலங்கை தரப்புகள் முயற்சி செய்கின்றன.

அரியநேத்திரனுக்கு ஆதரவாகவும் திரும்பலாம். அது அரசியல் யதார்த்தம். அந்த யதார்த்தத்திற்கு இப்போது இடம் இருக்கிறதா, என்பது சந்தேகமே.

ஆனால், இதில் முக்கியமான பிரச்சினை சஜித்துக்குத்தான். 2019 ஜனாதிபதி தேர்தலில், கோட்டபாய ராஜபக்சாவை எதிர்த்து தோல்வியுற்ற சஜித் பெற்ற 42 சதவீத வாக்குகளில் பாதியாவது, இலங்கை தமிழர், மலையக தமிழர் மற்றும் முஸ்லீம் வாக்காளர்களின் ஆதரவினால் கிடைத்தது. அன்று, இந்த மூன்று தரப்புகளின் பெருவாரியான வாக்குகள்



பெருவாரியான தமிழர்கள் முதல் விருப்பு வாக்கை அரியநேத்திரனுக்கு அளித்தால், அவர்களுடைய இரண்டாவது விருப்பு வாக்குகள் தென்னிலங்கை அரசியலில் முக்கியத்துவம் பெறும். பொதுவேட்பாளரை களம் இறக்குவதற்கு காரணமே, தென்னிலங்கை தலைமைகளுக்கு, அரசியல் தீர்வு குறித்து காத்திரமான ஒரு செய்தியை வழங்கவேண்டும் என்று கூறப்பட்டு வந்தது. குறிப்பாக, இந்த முயற்சியின் பின்னர் ஒன்று திரண்ட சிவில் அமைப்புகளே இங்ஙனம் கூறி வந்துள்ளன.

அவர்களோடு கை கோர்த்த ஏழு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இது போன்ற எண்ணம் உண்மையிலேயே இருந்ததா, என்பது இன்னமும் கேள்விகுறியே. தமிழ் அரசு கட்சியுடனான கூட்டமைப்பு உடைந்த பின்னர், அதில் பங்கு பெற்ற கட்சிகளுக்கு, நாடாளுமன்ற தேர்தலை சந்திக்க புதியதொரு ஊன்றுகோல் தேவைப்பட்டது. பொதுகட்டமைப்பு அவர்களுக்கு அதிகப்படியான வாக்குகளை, நாடாளுமன்ற தேர்தலில் பெற்றுதரும் என்ற நப்பாசையிலேயே அவர்கள் பொது வேட்பாளர் பின்னால் அணிதிரளலாம் என்று கருதி களமிறங்கினர். ஆனால், அந்த ஆசை கானல் நீர் என்று அவர்களுக்கு பின்னர்தான் புரியத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில், இந்த வாரத்தின் முன் பகுதியில் கூடிப் பேசிய பொதுகட்டமைப்பில் இடம்பெற்றிருக்கும் இரு தரப்பினரும் மீண்டும் தாங்கள் ஒருங்கிணைந்து செயல்பட போவதாக தீர்மானம் செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதன்படி, அண்மையில் நிகழ்ந்தது போல், சிவில் அமைப்பினரை ஓரம் கட்டிவிட்டு, அரசியல் தலைவர்கள் மீணடும் ரணிலையோ, அல்லது அழைப்பு கிடைத்தால், சஜித் மற்றும் அனுர குமாரவையோ சென்று சந்திக்க மாட்டார்கள் என்று முடிவு செய்துள்ளார்கள்.

இனி அவ்வாறான அழைப்புகள் கிடைத்தால், அது அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் பின்னர் அதனை அலசி ஆராய்ந்து ஒரு மனதாக முடிவு எடுப்பார்கள். அதனை தொடர்ந்து பேச்சு நடைபெற்றால், அனைத்து தரப்பினரும் ஒரு சேர பங்குபெறுவார்கள். அதாவது, இல்லாத ஊருக்கு, வழி சொல்கிறார்கள்.

இவ்வாறான நீட்டி முழக்கும் முடிவிற்கு அர்த்தம்தான் என்ன? பொது வேட்பாளரை ஆதரிக்கும் அரசியல் கட்சியினர், இனி, இவ்வாறான அழைப்பை தென்னிலங்கை தரப்புகளிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை என்பதுதான். குறிப்பாக, தனியாட்சி அல்லது தனி நாடு கேட்கும் பொது வேட்பாளர் தரப்பு என்ற எண்ணம் தென்னிலங்கையில் தோன்றிய பின்னர், அந்த வேட்பாளர்கள், இத்தகைய தமிழ் தலைமைகளுடன் பேச்சு நடத்தி, தங்களது அடிப்படைவாதியான வாக்காளர்களை இழக்க விரும்புவார்களா, என்ன?

### புரியாத புதிர்

தற்போதைய களநிலையில் இருந்து அறியவருவதெல்லாம், குறிப்பாக வடக்கு மாகாணத்தில், ரணில், சஜித் ஆகியோருக்கு, பொது வேட்பாளரைவிட அதிக வாக்குகள் கிடைக்கும் என்ற கருத்துத்தான். இதுவே, எதிர்வரும் நாட்களில், சஜித்திற்குக் கிடைத்தன. ஆனால், இன்றுள்ள காட்சி மாற்றத்தால், இந்த மூன்று தரப்பினரின் வாக்குகளுமே, குறிப்பாக சஜித் மற்றும் ரணில் ஆகிய இருவருக்கும் இடையில் பிரியலாம்.

இதன் காரணமாக, சஜித்தின் சிறுபான்மையினரின் வாக்குவங்கியில் ஓட்டை விழலாம். அதனை ஈடு செய்யும் விதத்தில் அவருக்கு தென்னிலங்கையில் வாக்குகள் கிடைக்குமா, என்பதே தற்போதைய கேள்வி. ஈடு செய்தால் மட்டும் போதாது, அவரது வாக்கு எண்ணிக்கையை மொத்தம் ஐம்பது சதவீதமாக உயர்த்தும் வண்ணம், அவருக்கு தென்னிலங்கை வாக்குகள் கிடைக்கவேண்டும்.

தமிழர் வாக்குகளை பெறுவதற்கு ஜேவிபி-ன் அனுர குமாரா முதல் சுற்றுகளில் முயற்சி செய்தார் என்பது உண்மை. வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்பாணம் என்று வடக்கிலும், பின்னர் கிழக்கிலும் பயணித்த அவர், தமிழர்களுக்கு அரசமைப்பில் உள்ள அதிகாரங்கள் கிடைக்கும் என்று முதலில் கூறி வந்தார். பின்னர், புதிய அரசமைப்பின் மூலம், அனைத்து சமூகத்தினிடையேயும் சமத்துவம் உறுதி செய்யப்படும் என்று சாரப்படும்படி பேசினார்.

தற்போது அவர்களது தேர்தல் விஞ்ஞானத்தில், வழமை போன்று, உள் ஒன்று வைத்து, புறம் ஒன்று கூறி உள்ளனர். சுமார் 250 பக்கங்கள் உள்ள இந்த தேர்தல் அறிக்கை மூலம், ஜேவிபி தலைமை தமிழ் மக்களுக்கு என்ன கூற வருகிறார்கள் என்பது இன்னமும் புரியாத புதிர்.

### உண்மை நிலை

தேர்ந்தெடுக்கப்பட்டால், நாடு தழுவிய இன நல்லிணக்கத்தை தங்களது அரசு உறுதி செய்யும் என்று அந்த அறிக்கை கூறிய அடுத்த நாளே, வேட்பாளர் அனுர ஒரு புதிய குண்டை தூக்கி போட்டிருக்கிறார். தங்களது அரசு, போர் குற்றங்கள் மற்றும் பொறுப்புகூறல் விடயங்களில் விசாரணைகள் மேற்கொண்டாலும், அதன் மூலம் எந்தவொரு (சிங்கள) படைச் சிப்பாயும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற அவரது கூற்று தமிழர் அரசியல் தலைமைகளிடம் ஒரு சிறிய சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால், உண்மை நிலைமை அதுதானே! எப்போது 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போர்கால இராணுவ தளபதி சரத் பொன்சேகாவிற்கு எந்தவித வெட்கமும் வேதனையும் இன்றி வாக்களித்து விட்டார்களோ, அப்போதே, போர் குற்றங்கள் குறித்து பேசும் அருகதையையே தமிழ் மக்களும் அவர்களது சமூக-அரசியல் தலைமைகளும் இழந்து விட்டன.

இன்னும் சொல்லப்போனால், போர் குற்றங்கள் மற்றும் பொறுப்புகூறல் போன்ற வார்த்தை பதங்களையே, இவர்கள் வெகுஜன பரப்பில் அறிந்தது, தேர்தல் முடிந்து, சில மாதங்களுக்குப் பின்னர்தான். அதாவது, மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்தான்.

அந்த விதத்தில், 2010 தேர்தலில் சரத் பொன்சேகா ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அப்போது இந்த தமிழ் தலைமைகள் போர் குற்றங்கள் குறித்து பேசி இருக்குமா? இன்னும் சொல்லப்போனால்,

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழில் தொடர் காய்ச்சலால் குடும்பப் பெண் உயிரிழப்பு

யாழில், 20 நாள்கள் தொடர் காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதன்போது நாரந்தனை மத்தி, ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய ஏழு பிள்ளைகளின் தாயார் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

இவர் கிளிநொச்சியில் மகள் வீட்டில் இருந்தவேளை கடந்த 7ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இருப்பினும் இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

பின்னர் 17ஆம் திகதி ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பின்னரும் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 19 ஆம் திகதி ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் 27ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளதோடு, உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# 9 ஆயிரத்து 525 காச நோயாளர்கள் 2023ஆம் ஆண்டில் காணப்பட்டனர்

நாட்டில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 9,535 காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய காசநோய் மற்றும் இருதய நோய்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டத்தின் விசேட வைத்திய நிபுணர் பிரமிதா சாந்தி லதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அதிகளவான காச நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 4,362 ஆகும்.

இந்நிலையில், மத்திய மாகாணத்திலிருந்து 986 காச நோயாளர்களும், ஊவா மாகாணத்திலிருந்து 407 காச நோயாளர்களும், தென் மாகாணத்திலிருந்து 844 காச நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணத்திலிருந்து 751 காச நோயாளர்களும், வடமேல் மாகாணத்திலிருந்து 717 காச நோயாளர்களும், கிழக்கு மாகாணத்திலிருந்து 576 காச நோயாளர்களும், வட மாகாணத்திலிருந்து 444 காச நோயாளர்களும், வட மத்திய மாகாணத்திலிருந்து 448 காச நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சளியுடன் கூடிய இருமல், நீண்ட நாள் காய்ச்சல், பசியின்மை, உடல் எடை குறைதல், இரத்தம் கலந்த சளி, மார்புவலி என்பன காசநோய்க்குரிய அறிகுறிகளாகும்.

எனவே, இத்தகைய நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்திய ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# இரண்டாவது வெறுப்பு?

4ம் பக்க தொடர்ச்சி...........

அன்றைய அரசுடன் மறந்துபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் போதுதானே. அந்த அமைப்பின் பேச்சாளரான சுமந்திரன், இவ்வாறான ஒரு குண்டை தூக்கி போட்டார்.

### வறட்டு கௌரவம்

அதிலும் கூட்டமைப்பு கொடுத்த அழுத்தத்தால் மட்டுமே, அமெரிக்கா போன்ற மேலை நாடுகள், ஐ.நா. மனித உரிமை அமைப்பில், போர் குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னெடுத்தது என்ற சுமந்திரனின் அறிவித்தலே, அரசுடனான பேச்சுக்கு முற்றுப்புள்ளி இட்டது. அந்தக் காலகட்டத்தில், பேச்சு சரியான பாதையில் முன்னேற்றகரமாக போய்கொண்டிருந்தது என்பதே உண்மை.

அதைவிட முக்கியம், மேலை நாடுகள், தங்களது வறட்டு கௌரவத்திற்காக, ராஜபக்ச அரசை கண்டிப்பதற்கும், தண்டிப்பதற்கும் மட்டுமே இனப்பிரச்சினையை கையில் எடுத்தார்கள். போர் முடிவுறுவதற்கு சில மாதங்களுக்கு அது குறித்து விவாதிப்பதற்காக அமெரிக்காவின் அன்றைய அயலுறவு அமைச்சர் ஹில்லாரி கிளிண்டன், இங்கே, பேராசிரியர் ஜீ எல் பிரீஸுக்கு அழைப்பு விடுத்தார். ராஜபக்சக்களின் முடிவின்படி, பிரீஸ், அமெரிக்க அமைச்சருக்கு ஒரு வரி பதில்கூட அனுப்பவில்லை.

அதே காலகட்டத்தில், போர் முடிவு குறித்து பேசவந்த இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் அயலுறவு துறை அமைச்சர்களை, கண்டி வரை வரவழைத்து, மரத்தடி நிழலில், மஹிந்த அவர்களுக்கு மரியாதை செய்தார். அவர்கள் அனைவரும் அடங்கிய ஐ.நா. மனித உரிமை அமைப்பின் முஸ்தீபுகள், மேலை நாடுகளின் வறட்டு கௌரவத்திற்கு வாய்க்காலாக அமைந்தது. இதில் எங்கே வந்தது, தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் உரிமை மீறல்கள்?

அரசுடனான பேச்சுகளை தகர்த்ததின் மூலம், தமிழர் தரப்பு சாதித்ததுதான் என்ன? இதில், புலம்பெயர்ந்தோரின் ஆகக்கூடின பங்களிப்பு என்ன? அந்த விதத்தில், இன்னமும் எங்கோ தங்களது சுகவாசத்தில் இருந்துகொண்டு, இங்கே தமிழர்களின் வாழ்வைத் தொடர்ந்து தகர்க்கும் முகமாக, புலம் பெயர்ந்தோர் செயல்படுவதன் காரணம் என்ன?

ஒரு காலத்தில், இந்த புலம்பெயர்ந்தோர், அமெரிக்கர் உள்ளிட்ட மேலை நாடுகளின் மேல் அழுத்தம் கொடுத்து, காரியங்களை சாதித்துக் கொண்டனர் என்று எண்ணுவதற்காகவாவது இடமிருந்தது. ஆனால், இன்றோ, அந்த அரசுகள் இழுக்கும் இழுப்பிற்காக, புலம்பெயர்ந்தோர் அரசியல் செய்கிறார்கள். அவர்கள் எறியும் ரொட்டி துண்டுகளுக்காக இங்கு சிலர் ஆடுகிறார்கள். இதுதானே உண்மை?

### உள்வீட்டு விவகாரம்

இந்த பின்னணி இவ்வாறிருக்க, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் களமிறக்கி விடப்பட்டுள்ள பொது வேட்பாளர் அரியநேத்திரன் சாதிக்கப்போவது என்ன? இன்றைய சூழலில், அவரைவிட, ரணிலுக்கும் சஜித்துக்குமே அதிக அளவில் தமிழர் வாக்குகள் கிடைக்கும் என்பதே களநிலை. முன்பு எப்போதோ, சித்தார்த்தன் கூறியது போல், தமிழர் வாக்குகளில் சரி பாதியாவது பெற்றுக்கொள்ளாமல், இவர்கள் எங்கே தமிழ் தேசியம் பேசுவது?

இதில், புதிய ஒரு பிரச்சினையே. அரியநேத்திரனுக்கு முதல் விருப்பு வாக்கு அளிக்க கோரும், பொதுகட்டமைப்பினர், தங்களது இரண்டாவது விருப்பு வாக்கை யாருக்கு அளிப்பது, என்ற கேள்விதான். இது, பொதுகட்டமைப்பினரின் உள்வீட்டு விவகாரம் என்றாலும், அவர்களது முடிவு, கொள்கை ரீதியாகவே பார்க்கப்படும்.

அதன்படி, அரியநேத்திரனுக்கு முதல் விருப்பு வாக்கு செலுத்தும் வாக்காளர்கள், இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்குகளை வேறு எந்த வேட்பாளருக்கும் அளிக்காமல் விட்டுவிடுவது. இது ஒரு வழி. மாறாக, வேறு ஏதாவது ஒரு வேட்பாளருக்கு இரண்டாவது விருப்பு வாக்கினை அளிப்பது, மற்றொரு வழி.

இதில், ரணில், சஜித் ஆகிய இருவர் மட்டுமே தமிழ் வாக்களர்கள் இடையே இருக்கும் 'சாய்ஸ்'. அவர்களில் ஒருவரின் பெயரை, பொது கட்டமைப்பு தேர்வு செய்தால், உள்வீட்டில் மற்றவரின் ஆதரவாளர்களிடம் இருந்து தப்ப முடியாது.

அவ்வாறானால், இரண்டாவது விருப்பு என்பதற்கு பதிலாக, இரண்டாவது வெறுப்பு என்று கூறி, தாங்கள் தேர்வு செய்து களமிறக்கியுள்ள அரியநேத்திரனுக்கு மட்டும, முதல் விருப்பு வாக்கை அளித்து விட்டு, தங்களது ஆதரவாளர்கள், தங்களது ஜனநாயக கடமையை முடித்துக் கொள்ளவேண்டும் என்பதே பொது கட்டமைப்பினரின் முடிவாக இருக்குமா? அவ்வாறானால், அந்த முடிவையும் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டாமா?




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir




# அறுபது அகவை காணும் நல்லூர் ஆறுமுகன் திருத்தேர் 1964 – 2024



நல்லூரில் நீண்ட காலமாக மஹோத்ஸவம் நடக்கிறது. ஆரம்ப காலத்தில் ஷண்முகர் ஒரு தேரில் எழுந்தருளி உலாக்கண்டருளினார். ஆனால் அத்தேர் பழுதுற்றது.

எனவே 1963 இல் புதிய தேர் உருவானது. அப்போதைய கோயில் அறங்காவலர் குகஸ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் இந்த தேரை ஒரு வருடத்துக்குள் உருவாக்கி வெள்ளோட்டம் விட வேண்டுமென விரும்பிப் பணி ஆற்றினார்.

திருவிடைமருதூர் இரா.கோவிந்தராஜுஸ்தபதியாரின் தலைமையில் நான்கு தமிழக ஆசாரியாரிகளும் உள்ளூர் ஆசாரிமாரும் இணைந்து இத்தேரை உருவாக்கினர்.

குகஸ்ரீ . குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் மேற்பார்வையில் நடந்த இப்பணிக்கு வவுனியா எம்.பி சுந்தரலிங்கம் தேவையான மரங்களைக் கொண்டு வந்து உதவினார்.

1964 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி இந்த ரத வெள்ளோட்டம் நடந்தது. அந்த ஆண்டு மஹோத்ஸவத்தில் ஷண்முகர் இத்தேரில் பவனி வந்தார்.

அக்காலத்தில் இத்தேர்த்திருப்பணிக்கு சுமார் ஒன்றே கால் இலட்சம் ரூபா முடிந்திருக்குமாம்.

இந்த தேரைச் செய்த கோவிந்தராஜு தான் நீர்வேலி வாய்க்காற்றரவைப்பிள்ளையாரின் தேர் மற்றும் நல்லூர் கைலாசப்பிள்ளையாரின் தேர் ஆகியவற்றையும் செய்தவர். மிகுந்த திறமையானவர்.



நல்லூர் ஷண்முக நாதனின் திருத்தேர் திராவிட எண் கோண மரபிலானது. பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், பேரூர் மட்டம், நராசன மட்டம், தேவாசன மட்டம், சிம்மாசன மட்டம் என்ற ஏழு தளங்களை உடையது. சிற்ப வரிகளை உடையது.

மேலே மணி மண்டபம், சொக்கட்டான் என்று நான்கு முதன்மை வாசல்களுடன் அமைய இருபது பவளக்கால்களால் தாங்கப்படும் விமானம் எட்டு பெரிய யாளிகளால் தாங்கப்படும் அமைப்புடையது.

மூன்று தளமுடைய மேல் விமானத்தின் மேல் கலசமும் உச்சிக்குடையும் காட்சி தருகின்றன.

கமலாகாரம் என்ற பூ வடிவ தோற்றம் நல்லூர் தேரில் குதிரைகள், பிரம்மா போன்ற அமைப்புக்கள் ஆரம்பத்திலேயே இல்லை. விமானத்தில் பறக்கும் கந்தர்வர்களும் இல்லை.

இங்கு பக்தர்களே குதிரைகள், அவர்களின் பக்தியே பிரம்மா என்று கொள்ளலாமோ அறியோம்.

சிறப்பாக தேரின் விமான முன் பக்கத்தில் செவ்வேளின் ஆணையை வெளிப்படுத்தும் குக்குடம் ஆகிய சேவல் காட்சி தருகிறது.

வாழை, கரும்பு, இளநீர் போன்றவற்றை தேரில் கட்டும் வழக்கமும் நல்லூரில் இல்லை. கொடிகளாலும் மணிகளாலும் வாகை மாலைகளாலுமே தேர் அலங்கரிக்கப்படுகிறது.

அதனால் தேரின் மத்தியில் ஊஞ்சலில் ஆடி வரும் ஷண்முகநாதனின் தரிசனம் தெளிவாக கிடைக்கும்.

இத்தேர் திருப்பணிக்காகவே வாழ்ந்த ஷண்முகதாஸ் மாப்பாணர் அந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசியில் பரமபதம் ஏகினார்.

அந்த அளவில் இத்திருத்தேர் மிக தனித்தன்மை பொருந்தியது. ஆறுமுகனை தாங்கி உலா செய்யும் தேரு அறுபது ஆண்டு நிறைவு காண்கிறது.

சென்ற 1964 குரோதி ஆண்டில் முதல் உலா கண்ட தேர் அறுபது ஆண்டுகளுக்கு பிறகு இந்த 2024 மங்கள க்ரோதியிலும் உலா காண இருக்கிறது.

எனவே இந்த மகா ரத பவனியின் அறுபதாவது ஆண்டு மணிவிழா ஆண்டு இந்த ஆண்டு ஆகும்.

**ஸ்ரீ. தி.மயூரகிரிக்குருக்கள்**

**சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின்**

# நல்லூர் கட்டுரைப்போட்டி முடிவுகள் மற்றும் பரிசளிப்பு

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலினால் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப் பெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழாவான செப்டெம்பர் 3 செவ்வாய்க்;கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டி பரிசுகளைப் பெறும் மாணவர்களின் விவரங்கள் வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

இல மாணவர் பெயர் பாடசாலை நிலை

1ம் இடம்--செல்வி.ர.கபிக்ஷனா யா/திருக்குடும்பகன்னியர்மடம்

2ம் இடம் - செல்வி.ஜெ.அபிஷனா யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்

3ம் இடம் - செல்வி.ந.லிஷ்ஜுனா யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

4ம் இடம் - செல்வி.உ.பூர்விகா யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்

5ம் இடம் -செல்வன்.ச.கிருஷன் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

6ம் இடம் - செல்வி.சு.பர்மிகா யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

7ம் இடம் - செல்வி.க.தௌமியா யா/ இந்து மகளிர் கல்லூரி

8ம் இடம் - செல்வி.வி.லதுஷ்ஜு யா/அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி

9ம்இடம்- செல்வி.எஸ்.பூர்விகாயா/திருக்குடும்பகன்னியர்மடம்

10ம் இடம் - செல்வி.மு.பவிசனா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**மத்திய பிரிவு**

1ம் இடம் - செல்வி.அருள்நிதி அபினி- யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

2ம் இடம் செல்வி.அ.மதுராகலா வித்தியா யா/ இந்து மகளிர் கல்லூரி

3ம் இடம் - செல்வி.பா.யசிந்தா யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

4ம் இடம் - செல்வி.ஊ.மதுஷ்ஜுலினி யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்

5ம் இடம் - செல்வி.கோ.யாழிசை யா/ இந்து மகளிர் கல்லூரி

6ம் இடம் -செல்வி.செ.சார்மி யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம் 6ம் இடம்

7ம் இடம்-- செல்வி.வி.அகஸ்ரிகா யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

8ம் இடம் - செல்வன்.இ.அகிலாஷ் யா/அத்தியார் இந்துக் கல்லூரி

9ம் இடம செல்வி. என்.வினுசியா - யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

10ம் இடம் - செல்வி.இ.திரிஷா, யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்

**மேற் பிரிவு**

1ம் இடம்- செல்வி.பு.விஜயதர்சினி யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

2ம் இடம் -செல்வி.கு.சலுசியா யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி;

3ம் இடம் - செல்வி.விவேதினி யா/திருக்குடும்பகன்னியர்மடம் 3ம் இடம்

2ம் இடம் -செல்வி.த.கஜீனா யா/கொக்குவில் இந்துக் கல்லூரி; 4ம் இடம்

5ம் இடம் - செல்வி.கே.சானுஜா யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 5ம் இடம்

6ம் இடம் -செல்வி.ப.ஆரணி யா/வைத்தீஸ்வராக் கல்லூரி 6ம் இடம்

7ம் இடம் - செல்வி.சு.திலக்சிகா யா/இந்து மகளிர் கல்லூரி 7ம் இடம்

8ம் இடம் -செல்வி.ஜுஜு.சனுஷா யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி; 8ம் இடம்

9ம் இடம் - செல்வி.ஜ.நிஷாம் யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் 9ம் இடம்

10ம் இடம் - செல்வி.தீ.துளசிகா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 10ம் இடம்

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் சொல்ல முடியாத கட்சிகளும் வேட்பாளர்களும்தான் இங்கு இருக்கிறார்கள் - என்றார்.

## உள்ளாட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஜனநாயக உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு தனது பொறுப்புக்களை சிறந்த முறையில் செயற்படுத்த நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பலத்தை ஆணைக்குழு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. நீதிமன்றத்தின் தீரப்புக்கமைய சகல தரப்பினரும் செயற்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு புதன்கிழமை கூடியது. இந்த கலந்துரையாடல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு உரிய இலக்கம் நீளீய்யூ 69 2023 , நீளீய்யூ 90/2023 மற்றும் நீளீய்யூ 139 ம 2023 இலக்க அடிப்படை உரிமை மனுத் தொடர்பில் 2024.08.22 ஆம் திகதி உயர்நீதிமன்ற ஐவர் அடங்கிய நீதியரசர் குழாம் வழங்கிய தீர்ப்பினை தேர்தல்கள் ஆணைக்குழு கௌரவமான முறையில் ஏற்றுக்கொண்டுள்ளது.

வாக்காளர்களின் சட்ட ரீதியிலான அபிலாசைகள், வாக்களிக்கும் உரிமை , அரச நிறுவனங்களின்செயற்பாடுகளினால்ஏற்படக் கூடிய நியாயமான கோட்பாடுகள் மற்றும் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி வழுங்கள், தொடர்பில் அரச நிறுவனங்களிடம் உள்ள இயைவான அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பில் மீளாய்வு செய்ததன் பின்னர் வழங்கப்பட்டுள்ள மீயுயர்வான நீதிமன்றத்தின் தீர்ப்பாக இந்த தீர்ப்பு கருதப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தீர்மானிக்கப்பட்டதற்கமைய நடத்தாமை மக்களின் அடிப்படை தொடர்ச்சியான மீறப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.' சட்ட நியதிகளுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கு தன்னிச்சையான நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அவதானம் செலுத்தப்பட்டு , 2023 உள்ளூராட்சி மன்ற தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் விரிவான காரணிகளை குறிப்பிட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு திட்டமிடல், ஒருங்கிணைத்தல், வளங்களை வேறுப்படுத்தல், அதற்காக ஏனைய தரப்பினரதுஒத்துழைப்பைபெற்றுக்கொள்ளல், மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் நிறைவேற்றுத்துறை உட்பட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தத்துவங்கள், பொறுப்பு மற்றும் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் வெவ்வேறாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான உரிய சட்டம் உள்ளூராட்சிமன்றங்கள் தேர்தல்வாக்கெடுப்பு கட்டளைச் சட்டம் என்றும், சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ளகாலவரையறைக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என நீதிமன்றம் விசேடமாக அவதானம் செலுத்தியுள்ளது.

பொருளாதார பாதிப்பினால் ஏற்பட்ட நிதி பற்றாக்குறை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் போனது என்று குறிப்பிடப்படுவது குறித்து ஆராய்ந்த உயர்நீதிமன்றம்' செலவினங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுப்பது வாக்கெடுப்புக்கான பணிகளை முன்னெடுத்ததன் பின்னராகும். அந்த செயற்பாடு உள்ளூராட்சி மன்றத் தேர்தலைநடத்துவதுடன்தொடர்புடையதல்ல,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு தேவையான நிதியை பெற நிதியமைச்சரின் அனுமதியை கோரி தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்காத காரணத்தால் தேர்தல் பணிகளை இடைநிறுத்த நேரிட்டது.இதனால் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டகாலவரைக்குள்தேர்தலை நடத்த முடியாமல் போனது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கு சார்பாக அழுத்தமான நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கு சகல அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பைபெற்றுக்கொண்டுசெயற்படுவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமை மற்றும் பொறுப்பு என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

2024.08.22 ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள வகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள், மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தலுக்காக அரசநிறுவனங்களின் ஒத்துழைப்பைபெற்றுக் கொள்ளவதாக இலங்கை பிரஜைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியளிக்கிறது.

இலங்கை பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு தனது பொறுப்புக்களை சிறந்த முறையில் செயற்படுத்த இந்த தீர்ப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பலத்தை ஆணைக்குழு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. அதேபோல் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புக்கு அமைய சட்டத்தால்விதித்துரைக்கப்பட்டுள்ளதற்கமைய வெகுவிரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் திகதியை அறிவிக்க தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பினை கருத்திற் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு தனது நோக்கத்தை செயற்படுத்திக் கொள்வதற்காக அரசியலமைப்பு மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் ஊடாக ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பொறுப்புக்கள் செயற்படுத்தப்படும். சகல தரப்பினரும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய செயற்பட வேண்டும்.

## சட்டத்தரணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வலியுறுத்தியும் மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரனைகள் பிரிதொரு தினத்திற்கு தவணை இடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு சென்ற சட்டத்தரணிகள் , எவ்வித வழக்கு விசாரணைகளுக்கும் சமூகமளிக்காது பணியைப் புறக்கணித்தனர்.

அதேவேளை, மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினால் குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று அடையாளப் பணிப்புறக்கணிப்புமேற்கொள்ளவுள்ளதோடு, ஊடக சந்திப்பும் மேற்கொள்ளப்படவுள்ளதாக மன்னார்சட்டத்தரணிகள்சங்கத்தின்தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ தெரிவித்தார்.

## மீட்சிக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தேரவாத வர்த்தகப் பொருளாதாரம், 2025இற்கு அப்பால் செல்லும் செயல்முறை, ஒளிமயமான சமுதாயத்தை நோக்கி, வெற்றிபெறும் தாய்நாடு, ஒன்றிணைந்த இலங்கை' ஆகிய 05 பிரதான பிரிவுகளை உள்ளடக்கிய 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமானஐந்துவருடங்கள்'என்றதேர்தல் விஞ்ஞாபனம், மகா சங்கத்தினர் உட்பட மதத் தலைவர்களுக்குசமர்ப்பிக்கப்பட்டதன்பின்னர், இளைஞர்களுக்கும் கையளிக்கப்பட்டது. கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இது வெளியிடப்பட்டது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனம் அடங்கிய ழுழுழு.ஷழிஜஷ்யி2024.யிவஇணையத்தளம் இதன்போதுஜனாதிபதியால்அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கான எனது கொள்கை பிரகடனம் வெறுமனே கொள்கை பிரகடணமாக மாத்திரமின்றி நாட்டின் மீட்சிக்காக செயற்படுத்த வேண்டிய துரித வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது.

மற்றைய வேட்பாளர்கள் நீண்ட கால தீர்வுகளை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தற்போதைய தருணத்தில் இலங்கைக்கு நீண்ட கால தீர்வு திட்டங்கள் பொருத்தமாகஅமையாது. இலங்கைதற்போது நெருக்கடிக்குள் இருக்கிறது. பொருளாதாரமும் அரசியலும் சரிவடைந்திருக்கிறது. 2022 இல் நாட்டிலிருந்த குழப்ப நிலைக்கு மத்தியில் நாட்டை ஏற்றுக்கொள்ள எவரும் இருக்கவில்லை.

என்னோடு பணியாற்ற வந்த பிரதமரும் அமைச்சர்களும் என்னுடன் உள்ளனர். எவ்வாறாயினும், 2023 களில் நாம் பொருளாரத்தைநிலைத்தன்மைக்குகொண்டு வந்தோம். பொருளாதார நிலைத்தன்மையை முன்னோக்கி கொண்டுச் சென்றிருக்கிறோம். நிலைத்தன்மையைஎதிர்வரும்காலங்களிலும் பாதுகாக்கவேண்டும். அதற்காகஇலங்கையை ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்த வேண்டியுள்ளது.

போலி வாக்குறுதிகளை வழங்கி நாட்டை மீண்டும் சரிவிற்குள் தள்ளிவிட வேண்டிய தேவை எனக்கு இல்லை. பொருளாதாரம், அரசியல் என்பன சரிவடைந்த நாடுகளின் நிலையை இன்று நாம் காண்கிறோம். பங்களாதேஷும், மாலைதீவும் அடைந்துள்ள நிலைமை நமக்குத் தெரிகிறது. நாம் கண்ட துர்பாக்கிய நிலையை மீண்டும் உருவாக்கினால்அடுத்தசந்ததியின்எதிர்காலம் சூனியமாகிப் போகும்.

அதனால் நாட்டில் நிலைத்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தை மாற்றியமைப் பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இளையோரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் தயாரித்துள்ளோம். அதனை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக மாறுப்பட்ட பொருளாதார திட்டங்களை செயற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இலங்கை - சர்வதேச நிதிய ஒப்பந்தம் மற்றும் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன்செய்துகொண்டுள்ளஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் செயற்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. அதேபோல்சீனா, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியமும் உள்ளது.

தற்போதும் நாம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செயற்படுவதால் எதிரணி வேட்பாளர்கள் அதனை செய்யத் தயாராக உள்ளனரா என்பதே எனது கேள்வியாகும். இவற்றைத் திருத்தம் செய்யாமல்தொடர்ச்சியாகநடைமுறைப்படுத்த அவர்களால் முடியுமா?

இதன்கீழ், முதற் காரணியாக தேரவாத வர்த்தக பொருளாதாரத்தை செயற்படுத்துகிறோம். அனுராதபுர யுகத்தில் இலங்கையில் சிறந்த வர்த்தகம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் அமைவிடம் அதற்கான சாதகத்தை ஏற்படுத்தி தந்திருந்தது. அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட அனைத்துக் குளங்களும் சொந்த நிதியில் அமைக்கப்படிருப்பதே அப்போதைய பொருளாதார வலுவுக்கு சான்றாகும்.

ஆனால் மகாவலியைக் கட்டமைக்க வெளநாட்டு உதவியை நாடினோம். இந்த மாற்றத்தை புரிந்துகொள்ள வேண்டும். இன்று தாய்லாந்தும் வியட்நாமும் தேரவாத வர்த்தக முறைமைகளை முழுமையாக பின்பற்றுகின்றன. அவற்றை நாமும் செயற்படுத்துவதாக தேர்தல் பிரகணடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அடுத்தாக நாட்டு மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். அதனால் பொருளாதார வளர்ச்சியில் மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அதனால் உறுமய திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணிஉறுதிகளைவழுங்குகிறோம். குறைந்த வருமானம்பெறும்2இலட்சம்குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்குகிறோம். தோட்டங்களை கிராமங்களாக்கி மக்களுக்கு காணி உறுதி வழங்கவுள்ளோம். மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் பணிகளை இந்த திட்டங்களின் கீழ் முன்னெடுக்கிறோம்.

எதிர்காலத்தில் சலுகை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டுக் கடன்களையும் வழங்குவோம் மத்திய தரத்தினருக்கும் கடன்களை வழங்குவோம். சிறு மற்றும் மத்திய தர தொழில்துறைபாதுகாப்பிற்காகதற்போதும்50 பில்லியன்களை நாம் வழுங்கியிருக்கிறோம்.

மூன்றாவதாக எமது பொருளாதார செயற்பாடுகளைகாலநிலைஅனர்த்தங்களுக்கு வழி செய்யாத வகையில் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். இவற்றோடு ஐந்து முக்கிய காரணிகள் உள்ளன. முதலில் வாழ்க்கை சுமையைக் குறைக்க வேண்டும். அதற்காக ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

அடுத்தாக தொழில்வாய்ப்புக்கள் உருவாக்குவோம். மூன்றாவது வரிச்சலுகைகளை வழங்குவோம். அடுத்தபடியாக பொருளாதாரத்தை மேம்படுத்துவோம். அதனால் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதே இலக்காக உள்ளது. பின்னர் 'உறுமய', 'அஸ்வெசும' திட்டங்களை செயற்படுத்துவோம்.

எனவே புதிய கொள்கைகளை கொண்டு வந்துவிவாதித்துக்கொண்டிருப்பதைவிடவும் மக்கள் கஷ்டத்தைப் போக்குவதற்கான திட்டங்களை செயற்படுத்துவோம். 'இயலும் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் துரிதமாக முன்னெடுக்க கூடிய செயற்பாடுகளை நாம் நடைமுறைப்படுத்துவோம்.. அதற்காக நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

குறிப்பாக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தலாம். அதற்காக அடிப்படைச் செயற்பாடுகளை இப்போதும் முன்னெடுத்திருக்கிறோம். சுற்றுலாத் துறையில் 5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளைக்கவரும்பணிகளை ஆரம்பித்துள்ளோம். உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். தொழிற்சாலை அபிவிருத்தி வர்த்தக வலயங்களை ஸ்தாபிக்கும் பணிகள் உள்ளிட்ட பல பணிகளை பிங்கிரியவில் ஆரம்பித்திருக்கிறோம். வடக்கிலும் ஹம்பாந்தோட்டையிலும் ஆரம்பிக்க தயாராக இருக்கிறோம்.

அதேபோல் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியைபொருளாதாரத்தின்முக்கியபங்காக இணைக்கப்போகிறோம். அடுத்ததாக டிஜிட்டல் மயமாக்கலுக்கான பணிகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை இளையோருக்கு உருவாக்கி கொடுக்க வேண்டியுள்ளது.

நான்குவருடங்களாகஎந்தொழில்வாய்ப்புக்களையும் வழங்க முடியாமல் போனது. நாம் முன்னேறும் போது தொழில் வாய்ப்புக்கள் உருவாகும்.. அதன் கீழ் ஸ்மார்ட் விவசாயம் செய்வதற்கான நிதி உதவிகளை வழங்க எதிர்பார்க்கிறோம். சுற்றுலா துறையிலும் இவ்வாறான தொழில்களை வழங்குவோம். அரசாங்கத்தின் கீழ் உள்ள தொழில்களுக்கும் உள்வாங்க எதிர்பார்க்கிறோம்.

பாடசாலை கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு தொழில் கல்வி பயில்வதற்கான வவுச்சர் ஒன்றை வழங்க எதிர்பார்க்கிறோம். தனியாரின் கீழ் செய்வதா அரசாங்கத்தின் கீழ் செய்வதா என்பதை தீர்மானிக்க அவர்களுக்கு உரிமை உள்ளது. அதனால் தொழில் பயிற்சி நிலையங்கள் அனைத்தையும் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவோம். அதேபோல் அனைவருக்கும் ஆங்கில கல்வி என்ற திட்டமும் செயற்படுத்தப்படும்.

ஹிங்குரங்கொடையில் புதிய விமான நிலையமொன்றை அமைக்கவுள்ளோம். தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டத்தை செயற்படுத்துவோம். அதேபோல் திருடர்களை பிடிப்பது பற்றி பேசுவோர் அதற்கான வழியை சொல்லவில்லை. ஆனால் நாம் அதற்குத் தேவையான சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். இவற்றை செயற்படுத்தபாராளுமன்றசெயற்குழுக்களை அமைத்து சபாநாயகரின் கீழ் அவற்றை வழிநடத்துவோரை தெரிவு செய்வோம்.

தொழிற்சங்கத்தினர், சட்ட தொழில் செய்வோர், வர்த்தக துறை சார்பில் ஒருவர் என்ற அடிப்படையில் அந்த குழுக்களை வழிநடத்துவோரை தெரிவு செய்வோம். பெண்களை வலுவூட்டும் சட்டம் நிறைவேறியுள்ளது. அரச ஊழியர்கள் புதிய பாடங்களை கற்பதற்கு ஒரு வருட விடுமுறை வழங்குவோம். அரச கொள்கை மற்றும் முகாமைத்துவ பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்போம். இவ்வாறு துரிதமாக செய்யக்கூடிய பல திட்டங்கள் பற்றி சிந்திக்கிறோம்.

2048 ஆண்டு வரையில் தூர நோக்கு சிந்தனையுடன் பார்த்து செயற்படுகிறோம். அதனை செய்ய முடியும் என்று சொல்பர்களுடனேயே நாம் பயணிக்கிறோம். அதனால் செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள் அடுத்த நாள் முதல் அடுக்கட்ட பணிகளை நாம் ஆரம்பிப்போம்.' என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

## நாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த 102 பேர் ராஜபக்சக்களை விட்டு வெளியேறிஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர். 35க்கும் மேற்பட்ட கட்சிகள், அமைப்புகள் அவருக்கு ஆதரவாக வந்துள்ளன. ஒட்டுமொத்தமாக 112க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்சவிடம் ஆட்சி கையளிக்கப்பட்ட போது ராஜபக்ச குடும்பமே ஆளும்தரப்பில் அங்கத்துவம் வகித்தது. அதுவே அவர்களது தோல்விக்கும் வழி வகுத்தது. எனவே பரீட்சித்துப் பார்ப்பதற்காக கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்ததைப் போன்றதவறைஜே.வி.பி.க்கு வாக்களிப்பதன் மூலம் மக்கள் செய்து விடக்கூடாது.

2022இல் நாட்டில் நிலவிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் போது வன்முறைகள் தலைதூக்கின. அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் காத்திருந்து மக்கள் இறந்ததை மறக்க முடியாது. அவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பளித்து விடக்கூடாது. எனவே ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவேண்டும்.

ராஜபக்ச ஆட்சி எம்மை வீதியில் நடக்க முடியாத நிலைக்கு ஆளாக்கியது. இரண்டு வருடங்களுக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மாற்றியமைத்தார் -என்றார்.

# நிந்தவூரில் யானை தாக்கி இறந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

வயல் வேலைக்கு சென்ற நிலையில் யாணையினால்தாக்கப்பட்டுஉயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவமானது அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆமை வட்டை வயல் பிரதேசத்தில் புதக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் நிந்தவூர் - 02 இரண்டாம் குறுக்குத் தெரு பிரிவை சேர்ந்த 62 வயது மதிக்கத்தக்க ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் சம்பவ இடத்திற்கு சென்று மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேசத்தில் யானை தாக்குதலுக்கு இலக்காகி பலர் பாதிக் கப்பட்டுள்ளதுடன் தற்போது வயல் அறுவடை காலம் என்பதால் யானை நடமாட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 20 ஆம் திகதி மாலை மணல் அகழ்வு வேலைக்கு சென்ற நிலையில் யானையினால் தாக்கப்பட்டு சம்பவ இடத்தில் நிந்தவூர் 21 ஆம் பிரிவை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய குடும்பஸ்தர் உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# தலதாவின் இடத்துக்கு பரணவிதானகே தெரிவு

ஐக்கியமக்கள்சக்தியின்உறுப்பினர் தலதா அதுகோரல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததன் காரணமாக ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாரத்ன பரணவிதானகே என்பரை நியமிக்க பெயர் குறிப்பிட்டு தேர்தல்கள்ஆணைக்குழுவர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இரத்தினபுரிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்பதவிவெற்றிடமாகியுள்ளாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தார்.

தெரிவத்தாட்சி அலுவலர் அரச மைப்பின் 99 (13 (ஆ) ஆம் உப உறுப்புரைக்கமைய மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (2) ஆவது உறுப்புரையின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினராக கருணாரத்ன பரணவிதானகே என்பவரை நியமிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவால் பெயர் குறிப்பிட்டு வர்த்தமானி வெளியிடப்பட் டுள்ளது. (05)

# கச்சதீவில் காப்பாற்றப்பட்ட மீனவர்கள் இந்திய துணைதூதரகத்தில் ஒப்படைப்பு



கச்சதீவுக்கு அண்மையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில் காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நான்கு மீனவர்களுடன் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படகு ஒன்று செவ்வாய்க்கிழமை தண்ணீரில் மூழ்கி விபத்துக் குள்ளானது.

இந்நிலையில் அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினர் இரண்டு மீனவர்களை மீட்டுள்ளதோடு, அத்துடன் காணாமல் போன மற்ற இரண்டு மீனவர்களையும் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் மீட்கப்பட்ட மீனவர்கள் இருவரும் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்கள் புதன்கிழமை குமுதினி படகு மூலம் குறிகாட்டுவானுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் வியாழக்கிழமை பலாலி விமான நிலையமூடாக இந்தியாவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண இந்திய துணை தூதரகம் முன்னெடுத்துள்ளது.(05)

# யாழில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவர் சாவு

யாழ்ப்பாணத்தில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த இளம் கடற்தொழிலாளி திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் கடற்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புத்தளம் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு





மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று (வியாழக்கிழமை) பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக நேற்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிரிதொரு தினத்திற்கு தவணை இடப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராகக் கொழும்பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கோரியும் மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் இந்த பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

நீதிமன்றத்திற்குச் சென்ற நிலையில் எவ்வித வழக்கு விசாரணைகளுக்கும் சமுகமளிக்காது பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

மேலும் மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தால் குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (வெள்ளிக்கிழமை) அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ள உள்ளதோடு ,ஊடக சந்திப்பும் மேற்கொள்ளப்படவுள்ளதாக மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ தெரிவித்தார்.(05)

## வாடகை வீட்டில் சட்டவிரோத மதுபானம் தயாரித்து விற்பனை செய்தவர் கைது

கடுவலை பிரதேசத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வீட்டில்சட்டவிரோதமதுபானத்தைத் தயாரித்துவிற்பனைசெய்துவந்தசந்தேகநபரொருவர் புதன்கிழமைகைது செய்யப்பட்டுள்ளார் என மதுவரி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மதுவரி திணைக்கள அதிகாரிகள் சட்டவிரோத மதுபானத்தைக்கொள்வனவுசெய்யும்போர்வையில் சந்தேக நபரை நீர்கொழும்பு பிரதேசத்திற்கு வரவழைத்து அவரை கைது செய்துள்ளனர்.

மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட விஸ்கி போத்தல்கள் எனக் கூறி சுமார் மூன்று மாத காலமாக இந்த சட்டவிரோத மதுபானத்தை விற்பனை செய்து வந்துள்ளதாக சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(05)



## 650 கையடக்கத் தொலைபேசிகளுடன் கற்பிட்டி பகுதியில் நபரொருவர் கைது

கற்பிட்டி பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த கெப் வண்டியை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து செவ்வாய்க்கிழமை இரவு கரம்பை சோதனைச் சாவடி யில் வைத்து சோதனைக்கு உற்படுத் தப்பட்டபோது சுமார் 650 கையடக்கத் தொலைப்பேசிகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கையடக்கத் தொலைப் பேசிகள் இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாகஅனுமதிப்பத்திரமின்றி கொண்டுவரப்பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித் தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம்கெக்கிராவைப்பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைப்பேசிகள் மறும் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட கெப் வண்டியையும் நுரைச்சோலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருவதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளதாக நுரைச்சோலைப் பொலிஸா தெரிவித்தனர்.

(05)

## இரும்புச்சத்து அடங்கிய பிஸ்கட் கிழக்கில் விரைவில் அறிமுகம்



(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்குமாகாணத்தில்நமக்கெல்லாம்தேவையான இரும்புச் சத்து அடங்கிய பிஸ்கட் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற ஆயுர்வேத மத்தியமருந்தகபரிசளிப்புவிழாவில்பிரதமஅதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய சுதேச மருத்துவ திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் மருத்துவர் எம்.ஏ. நபீல் தெரிவித்தார்.

காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் மருந்தக பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியசூரி டாக்டர் எம் சி எம். காலித் தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்கம பெண்கள் பாடசாலையில் புதன்கிழமை நடைபெற்றது .

கௌரவ அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் சகிலா ராணி இஸ்ஸதீன் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்பி.அப்துல் வாஜித் உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த பிஸ்கட் தற்சமயம் தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது . அதற்கான முடிவு வந்ததும் கல்முனையில் வைத்து அதனை அறிமுகப்படுத்தி அனைவருக்கும் வழங்க வைத்திருக்கின்றோம் என்ற செய்தியை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவர் காலித் ஆயுர்வேதத்திற்கு கிடைத்த சிறந்த ஒரு பொக்கிஷம்.அவர் எழுதிய நூலை நாங்கள் அச்சிட்டுவெளியிட தயாராக இருக்கின்றோம் என்றார்.

மாகாண ஆணையாளராக அண்மையில் பதவியுயர்வுபெற்றடாக்டர்நபீல்பொன்னாடைபோர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மத்திய மருந்தகம் நடத்திய மாணவர்கள் இடையிலான ஆயுள்வேதம் பற்றிய வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன .

கூடவே டாக்டர் காலித் எழுதிய 'சுற்றாடலும் சுக வாழ்வும்' என்ற சிறுசஞ்சிகை அங்கே இலவசமாக அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

## தனது 12 வயது மகளின் முகத்தில் தீக் காயம் ஏற்படுத்தியவர் கைது

பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில்உள்ளவீடொன்றில்தனது மகளின்முகத்தைதீக்குச்சியால்எரித்து காயப்படுத்தியதாக கூறப்படும் தந்தை ஒருவர் நேற்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார் என லியன்கஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே கைது செய்யப்பட்டுள்ளார்.

7 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 12 வயதுடைய மகளே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

காயமடைந்த மகள் தியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மகளின் தாயார் தேயிலை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லியன்கஹவெல பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வலியுறுத்த ஒன்று திரள்வோம்

## அருட்தந்தை மா.சத்திவேல் அழைப்பு



சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதிவேட்பாளர்களுக்குவலியுறுத்தவும் சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினத்தில் ஒன்று திரள்வோம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் நிலவிய தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்த காலப்பகுதியில் இலங்கை அரச படைகளால் புரியப்பட்ட மனிதகுலம் ஏற்காத யுத்த குற்றங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு பேரினவாத கருத்தியல் கொண்ட எந்தவொரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் துணிய மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

ஆயுத யுத்தும் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 15 வருட காலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தமது அன்புக்குரியவர்களை தேடி கிடைக்காத நிலையில் 2,500 நாட்களாக தொடர்போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி அதாவது நாளை சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தினை நடத்துவதற்கு ஆயத்தங்களை செய்துள்ளனர்.

இப்போராட்டத்திற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமது முழுமையான ஆதரவை தெரிவிப்பதோடு வடகிழக்கு வாழ் அனைவரும் அப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றது.

தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நிற்கும் பிரதான வேட்பாளர்களும் அவர்களின் பின்புலத்தில் இயங்கும் கட்சிகளும் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்தத்திற்கும் இனப்படுகொலைக்கும் ஆதரவு தெரிவித்தவர்களே. அத்தோடு தமது ஆதரவாளர்களை யுத்த வெற்றி கொண்டாட தூண்டியவர்களுமாவர்.

இவர்கள் இனி மேலும் தமிழர்களுக்கு யுத்தக்குற்றங்களுக்கான நீதியையோ, அரசியல் நீதியையோ பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. இவர்களின் உண்மையை கண்டறிவதற்கான வழிமுறைகள் எல்லாம் மாயமானே. அதில் தமிழர்களுக்கு இனியும் நம்பிக்கை இல்லை.

அதுமட்டுமல்ல இவர்கள் எதிர்நோக்கி இருக்கும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் அனைத்து தேர்தல்களிலும் பேரினவாத வாக்குகளையே நம்பி இருக்கின்றனர். பேரினவாத பௌத்த துறவிகளையே கவசமாகவும் கொண்டுள்ளனர். இவர்களை எதிர்த்து தமிழர்களுக்கு எத்தகைய நீதியையும் உறுதி செய்யப்போவதுமில்லை.

இவர்கள் வடகிழக்கில் மக்கள் சந்திப்புகளை நடத்தும்போதும் பிரச்சார பொதுக்கூட்டங்களில் போதும் யுத்தக்குற்றங்கள் காணாமல், ஆக்கப்பட்டோர் விடயமாக எத்தகைய கருத்துகளையும் கூறுவதும் கிடையாது. இவர்களுக்கு சாமரை வீசுகின்ற தமிழ் அரசியல்வாதிகளும் இவ் விடயம் சம்பந்தமாக பிரதான வேட்பாளர்களிடம் கேள்வி கேட்பதற்கோ பொது மேடைகளில் கருத்து கூறுவதற்கோ தயங்குவது தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் என்பது வெறுமனே தமது உறவுகளைத் தேடும் போராட்டம் மட்டுமல்ல. அது தமிழர் தேசத்தின் அரசியல் நீதிக்கான போராட்டத்தின் அடையாளமாகவும் உள்ளது. போராட்டத்தில் ஈடுபடுவோரில் நூற்றுக்கும் அதிகமானோர் தீர்வு கிட்டாத நிலையில் வேதனையில் மரணத்தை தழுவியுள்ளனர். இதனை சாதாரண மரணம் என நாம் கடந்து செல்ல முடியாது.நீதி நிலை நாட்டப்படாது நடத்தப்பட்ட திட்டமிட்ட மறைமுக கொலை எனவே அடையாளப்படுத்தல் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்தும் போராட்டம் மரணிக்காது உள்ளமைக்கு போராட்ட அமைப்புக்களின் மனத்திடமே காரணம் எனலாம். அப்போராட்டத்தினை உயிரோட்டமுள்ளதாக்க தமிழர் தேசமாக எம் பங்களிப்பை செய்து எம் குரலை சர்வதேசத்திற்கு கேட்கச் செய்வோம்.

மேலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தினம் தினம் சிந்தும் அறிந்தும் எமது உறவுகளும் மாவீரர்களுமாக இலட்சங்களை தாண்டியோர் இரத்தம் சிந்திய நிலத்தில் நின்றும் பேரினவாத அரசுக்கும் இனப்படுகொலை சூத்திர தாரிகளுக்கும் கொடி பிடித்துக் கொண்டு திரியும் தமிழர் தேச அரசியல் நரிகளுக்கு எதிராக குரல் எழுப்பவும் ஒன்று திரள்வோம்.

இந்தியா இன்றும் எமக்கான அரசியல் தீர்வாக 13 மே திணிக்க முயல்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் யுத்தக் குற்றங்களுக்கு காணாமல் சர்வதேச விசாரணையோடு காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது அரசியல் நீதி என்பதை மையப்படுத்தி சுயநிர்ணய உரிமையை உறுதி செய்து சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதிவேட்பாளர்களுக்கு வலியுறுத்தவும் ஒன்று திரள்வோம். - என்றுள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2024இல் வெளியிடப்பெற்றது